# பெரியாழ்வார் திருமொழி 4-3
## உருப்பிணி நங்கை
(திருமாலிருஞ்சோலை மலையின் சிறப்பு)

349 * உருப்பிணி நங்கை தன்னை மீட்பான் * தொடர்ந்தோடிச் சென்ற *
உருப்பனையோட்டிக் கொண்டிட்டு * உறைத்திட்ட உறைப்பன் மலை **
பொருப்பிடைக் கொன்றை நின்று * முறியாழியும் காசும் கொண்டு *
விருப்பொடு பொன் வழங்கும் * வியன் மாலிருஞ்சோலையதே (1)

350 கஞ்சனும் காளியனும் * களிறும் மருதும் எருதும் *
வஞ்சனையில் மடிய * வளர்ந்த மணிவண்ணன் மலை **
நஞ்சுமிழ் நாகம் எழுந்தணவி * நளிர் மாமதியை *
செஞ்சுடர் நாவளைக்கும் * திருமாலிருஞ்சோலையதே (2)

351 மன்னு நரகன் தன்னைச் * சூழ் போகி வளைத்தெறிந்து *
கன்னி மகளிர் தம்மைக் * கவர்ந்த கடல்வண்ணன் மலை **
புன்னை செருந்தியொடு * புனவேங்கையும் கோங்கும் நின்று *
பொன்னரி மாலைகள் சூழ் * பொழில் மாலிருஞ்சோலையதே (3)

352 மாவலி தன்னுடைய * மகன் வாணன் மகளிருந்த *
காவலைக் கட்டழித்த * தனிக் காளை கருதும் மலை **
கோவலர் கோவிந்தனைக் * குற மாதர்கள் பண்குறிஞ்சிப் *
பாவொலி பாடி நடம் பயில் * மாலிருஞ்சோலையதே (4)

353 * பல பல நாழம் சொல்லிப் * பழித்த சிசுபாலன் தன்னை *
அலவலைமை தவிர்த்த * அழகன் அலங்காரன் மலை **
குலமலை கோலமலை * குளிர் மாமலை கொற்றமலை *
நிலமலை நீண்டமலை * திருமாலிருஞ்சோலையதே (5)

354 பாண்டவர் தம்முடைய * பாஞ்சாலி மறுக்கமெல்லாம் *
ஆண்டு அங்கு நுற்றுவர் தம் * பெண்டிர் மேல் வைத்த அப்பன் மலை **
பாண்தகு வண்டினங்கள் * பண்கள் பாடி மதுப் பருக *
தோண்டலுடைய மலை * தொல்லை மாலிருஞ்சோலையதே (6)

355 கனங்குழையாள் பொருட்டாக் * கணை பாரித்து * அரக்கர்

தங்கள்
இனம் கழுவேற்றுவித்த * எழில் தோள் எம்மிராமன் மலை **
கனம்கொழி தெள்ளருவி * வந்து சூழ்ந்து அகல் ஞாலம்
எல்லாம் *
இனம் குழுவாடும் மலை * எழில் மாலிருஞ்சோலையதே (7)

356 எரி சிதறும் சரத்தால் * இலங்கையினை * தன்னுடைய
வரிசிலை வாயில் பெய்து * வாய்க் கோட்டம் தவிர்த்துகந்த **
அரையன் அமரும் மலை * அமரரொடு கோனும் சென்று *
திரிசுடர் சூழும் மலை * திருமாலிருஞ்சோலையதே (8)

357 கோட்டுமண் கொண்டிடந்து * குடங்கையில் மண்
கொண்டளந்து *
மீட்டுமதுண்டுமிழ்ந்து * விளையாடு விமலன் மலை **
ஈட்டிய பல்பொருள்கள் * எம்பிரானுக்கு அடியுறையென்று *
ஓட்டரும் தண் சிலம்பாறுடை * மாலிருஞ்சோலையதே (9)

358 * ஆயிரம் தோள் பரப்பி * முடியாயிரம் மின்னிலக *
ஆயிரம் பைந்தலைய * அனந்த சயனன் ஆளும் மலை **
ஆயிரம் ஆறுகளும் * சுனைகள் பலவாயிரமும் *
ஆயிரம் பூம்பொழிலுமுடை * மாலிருஞ்சோலையதே (10)

359 * மாலிருஞ்சோலை என்னும் * மலையை உடைய மலையை *
நாலிருமூர்த்தி தன்னை * நால்வேதக் கடல் அமுதை **
மேலிருங் கற்பகத்தை * வேதாந்த விழுப் பொருளில் *
மேலிருந்த விளக்கை * விட்டுசித்தன் விரித்தனவே (11)